# DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar

Miscellaneous

Preliminary Register

Session Case SC.No. 302/2025

Prosecution Witness - P.W.1

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | அஜித் |
| Father's Name | : | Krishnamani |
| Village | : | Muthaliyarvilai |
| Taluk | : | Agasteeswaram |
| Calling | : | Wood work |
| Age | : | 24 |
| Date | : | 07.08.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2026.

**(எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் கோட்டாரில் குடியிருந்து வருகிறேன். நான் ஆசாரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைதெரியாது அவர்களை பார்த்ததில்லை. புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. 31.11.2024 ம் தேதி தீபாவளி பண்டிகை கொண்டாடுவதற்கு முதலியார்விளைக்கு நாங்கள் நண்பர்களாக சென்றோம். யாரும்

என்னை தாக்கவில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேன். புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும்**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க வேண்டி கோரினார் அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலீஸ் விசாரணையில் 131.10.2024 ம் தேதி இரவில் 11.30 மணியளவில் நானும் எனது ஊரை சேர்ந்த சுனில் என்பவரும் மாசான முத்து கோவில் முன்பு நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது ஆஜர் எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் வந்ததாகவும் 1ம் எதிரி நீ எதற்காக இங்கே நிற்கிறாய் என்று கேட்டதாகவும் 1ம் எதிரி என்னை இடது கண்ணத்தில் அடித்ததாகவும், 2 ம் எதிரி என்னை பார்த்து கெட்டவார்த்தைகள் பேசி கையால் அடித்ததாகவும் அதன் பின் 1ம் எதிரி கையில் வைத்திருந்த கத்தியை எடுத்து மிரட்டி செத்துபோ என்று கூறியதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை - இல்லை.**